செ.வெ.எண்.23 நாள்: 14.05.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் மாற்றுத்திறனாளிக்களுக்கான வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மாற்றுத்திறனாளிகள் 100 சதவிதம் வாக்களிக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.05.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்றத் தேர்தல் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க வசதியாக பல்வேறு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டு அவர்கள் எளிதாக வாக்களித்தனர். ஓட்டப்பிடாரம் சட்டமன்ற இடைத்தேர்தலிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு வாக்குச்சாவடிகளில் 3 சக்கர நாற்காலி வசதி மற்றும் உதவியாளர் வசதிகளும் செய்து தரப்படும். மேலும் வாக்குச்வாவடி வரை அவர்கள் வாகனத்தில் வர அனுமதியும், வாகனங்களை நிறுத்துமிடங்களும் ஒதுக்கப்படும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மாற்றுத்திரானாளிகள் வந்து செல்ல வசதியாக சாய்வுதள வசதியும் சக்கர நாற்காலியில் சென்று வாக்களிக்கும் வகையில் இடவசதியும் ஏற்பாடு செய்யப்படும். அனைத்து வாக்குசாவடியில் தலா 2 வீல் சேர்கள் வைக்கப்படும். ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி பகுதியில் 1500 மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் உள்ளதாக வாக்காளர் பட்டியலில் மார்க் செய்யப்பட்டுள்ளது. பார்வையற்ற வாக்காளர்களுக்கு பிரைலி வசதியும் செய்யப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கும் மிக வயதான முதியவர்களுக்கும் என தனி வரிசையில் சென்று விரைவில் வாக்களிக்கவும் வசதி செய்யப்படும். எனவே, ஓட்டப்பிடாரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் அனைத்து மாற்றுத்திரானாளிகளும் வாக்களிக்க விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும் என பேசினார்.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகளுக்கான வாக்காளர் விழிப்புணர்வு நோட்டீஸ்களை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கினார். மேலும் 100 சதவிதம் வாக்களிக்க விழிப்புணர்வை ஏற்படுத்திடும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்துடன் கூடிய விழிப்புணர்வு நோட்டீஸ்களையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.தனபதி, முதன்மை கல்வி அலுவலர் திரு.முருகேசன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.ஜெயசீலா, தேர்த்ல வட்டாட்சியர் திரு.நம்பிராஜன் மற்றும் அலுவலர்கள் மறாற்றுத்திரானாளகிள் நலச் சங்கங்களின் பிரதிநிதிகள், மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.